1975 நவம்பர் 6]

Applications for Power Connections

@ * 65 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of applications received during 1972-73, 1973–74 and 1974–75 up to 28th February 1975, requesting power connection for (i) domestic and (ii) agriculture purposes in North Arcot District; and

(*b*) among them, the number of power connections given, category-wise?

மின் இணைப்பு கோரிய மனுக்கள்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் 1972-73, 1973-74 ஆம் ஆண்டு களிலும், 1974-75 ஆம் ஆண்டில் 28-2-1975 முடியவும் (1) வீடு (2) வேளாண்மை உபயோகத்திற்காக மின் இணைப்பு கோரி வந்த மனுக்கள் எத்தனை?

(இ) அவைகளில் இதுவரை இணைப்புகள் வழங்கப்பட்டவை இனம் வாரியாக எத்தனை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

வருடம்,	வீட்டிற்கு அளிக்கப்பட்ட மின் இணைப்புகள்.		வேளாண்மைக்கு அளிக்கப்பட்ட மின் இணைப்புகள்.	
	மின் இணைப்பு கோரி வந்த மனுக்கள்.	மின் இணைப்பு வழங்கப்பட்டவைகள்.	மின் இணைப்பு கோரி வந்த மனுக்கள்.	மின் இணைப்பு வழங்கப்பட்டவைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
1972–73	6,001	4,971	10,307	8,555
1973–74	5,529	5,476	4,787	4,684
1974–75	6,370	5,580	4,294	2,867

@ 31-10-1975 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப் பட்டது.

திரு. எல். பலராமன் : அமைச்சர் அவர்கள் பதிலிலே வீடுகளுக்கு மின்னிணைப்பு ஏறத்தாழ முழுவதும் கொடுக்கப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். விவசாய பம்புசெட்டுகளுக்கு, 10 ஆயிரத்துக்கு 8 ஆயிரம் என்ற அளவில் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக மூன்று பிரிவாக மனுக்கள் வாங்குகின்றார்கள். அதாவது, Construction, O. & M., Commercial. என்ற மூன்று பிரிவுகளில் வாங்குகின்றார்கள். இப்படி மூன்று பிரிவின்படியும் வாங்கும் மனுக்களை ஒன்று திரட்டித்தான் பதில் அளிக்கப் பட்டதா, அப்படியிருப்பின் பல மனுக்கள் விடப்பட்டிருக்கும் என்பதை அரசு அறியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒன்று திரட்டித்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறைவுக்குக் காரணம் ஒதுக்கப்படுகின்ற தொகை போதவில்லை என்பதுதான். மேலும் இப்போது அலுமினியம் கண்டக்டர் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. சீக்கிரத்தில் அது தாராளமாகக் கிடைத்து விடும். கிடைத்தவுடன் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு, நிறை வேற்ற வேண்டும் என்று அரசு தெரிவித்திருக்கிறது.

திரு. வி. வெங்கா : அலுமினியம் கண்டக்டரை உபயோகப்படுத்தாமலே பக்கத்திலே இருக்கக்கூடிய போல்கள் மற்றும் சாதனங்களை வைத்தும் உபயோகப்படுத்தலாம். ஆகவே, பக்கத்திலே இம்மாதிரி வசதிகள் இருந்தும், சில இடங்களிலே வழங்கப்படாமலிருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா? அம்மாதிரி வசதிகள் இருந்தால், அந்த இடங்களுக்குக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் பிரச்சினை இருக்கிறது என்று விவரங்கள் கொடுத்தால், பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எல். பலராமன் : 1974-75 ஆம் ஆண்டிலே 4 ஆயிரம் மனுக்கள் தான் பதிவு செய்யப்பட்டன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரிஜிஸ்தர் செய்ததனால்தான், 4 ஆயிரம் என்ற நிலை. வரும் எல்லா மனுக்களையும் பதிவு செய்யாத ஒரு நிலை இருப்பதை அரசு அறியுமா? வருகின்றவைகளை எல்லாம் தக்கவாறு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க அரசு அறிவுரை வழங்குமா என்றும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வந்திருக்கின்ற விவரப்படி வேளாண்மைக்கு அளிக்கப்பட்ட மின்னிணைப்பு குறைவுதான். மனுக்கள் வந்திருப்பது 4,794, அதில் இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பது 2,497 மனுக் களுக்குத்தான். பதிவு செய்துதான் இந்த விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

1975 நவம்பர் 6]

முக்கியமான பிரச்சினே இதுவல்ல. வரும் மனுக்களையெல்லாம் பதிவு செய்கின்றார்கள். அலுமினியம் கண்டக்டர் கிடைக்கவில்லே என்பதுதான் முக்கியமான பிரச்சினே. ஆறு மாத காலமாக இந்த அலுமினியம் கண்டக்டர் கிடைக்கவில்லே. டன் ஒன்றுக்கு அதிகமான விலே இருந்தும் பரவாயில்லே என்ற முறையில், நம்முடைய அரசின் சார்பாக இறக்குமதி செய்வதற்குக்கூட ஒப்புக்கொண்டோம். ஆனல், இவைகளே வெளிநாட்டிலிருந்து வாங்கக்கூடாது என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. இங்கே உற்பத்தியாகும் அலுமினியம் கண்டக்டர்கள் இந்த ஆண்டு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிரும். ஆகவே அவைகள் கிடைக்கப்பெற்றவுடன், எல்லாவற்றுக்கும் இணைப்புக் கொடுத்து, பிரச்சினைகள் இல்லாமல் போகும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினுக்கள் 77, 78 மற்றும் 79 ஒன்ருகவே இருப்பதால், அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பதில் அளிப்பார்கள்.

Artificial Rain.

* 77. *Q.*—THIRU D. V. D' MONTE: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to produce artificial rain in Madras City by seeding clouds with silver iodide to relieve water scarcity; and

(*b*) if so, the steps taken in that regard?

செயற்கை மழை.

திரு. டி. வி. டி' மாண்டி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கிழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னே மாநகரில் தண்ணீர் பற்ருக்குறையைப் போக்க மேகத்தினூடே சில்வர் அயோடைடு தூவி செயற்கை மழை பெய்விக்கும் செயற்குறிப்பு எதுவும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதுகுறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) & (இ) மதிப்பிற்குரிய உறுப்பினர் அறியவிழையும் தகவல் அடங்கிய விவர அறிக்கை @ ஒன்று சட்ட மன்ற மேலவையில் வைக்கப்பட்டுள்ளது.

@ 96·97 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.